## 48. துதியோடும் புகழ்ச்சியோடும்

### பல்லவி

துதியோடும் புகழ்ச்சியோடும்
வாசலில் நுழைந்திடுவோம்

### அனுபல்லவி

*உன்னதமானவர் வருகிறார்*
*ஆயத்தமாய் இருப்போம்*

### சரணங்கள்

1. வாசல்களே உயர்த்திடுங்கள்
அனாதி கதவுகள் உயருங்கள்
மகிமையின் ராஜா வருகின்றார்
நியாயம் தீர்க்க வருகின்றார்
- துதியோடும்

2. ஜெபத்திலே விழித்திடுங்கள்
கவனமாய் செயல்படுங்கள்
மாம்ச கரைகளை களைந்துவிட்டு
ஆவியின் கனிகளை வளர்த்திடுங்கள்
- துதியோடும்

3. தீவட்டியை பிடித்துகொண்டு
மனவாளனுக்கு எதிர்கொள்ளுவோம்
புத்தியுள்ள கன்னியை போல
எண்ணெயால் நிறைந்திருப்போம்
- துதியோடும்